மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) தகட்டூரிலிருந்து 18 கி.மீ. தூரத்தில் வேதாரண்யத்தில் நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பின்கீழ் ஒரு பயணியர் விடுதியும், மற்றும் தகட்டூரில் இருந்து 17 கி.மீ. தூரத்தில் திருத்துறைப் பூண்டியில் பொதுப்பணித்துறையின் பராமரிப்பின்கீழ் ஒரு ஆய்வு விடுதியும் உள்ளன. எனவே, தற்பொழுது தகட்டூரில் உடனடியாக பயணியர் விடுதி கட்ட வேண்டிய அவசியமில்லை.

நிலக்கோட்டை வட்டம் மெட்டூர் கேட் இரயில்வே லயினுக்கு அருகில் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம்.

(*121—வினா 19937)—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் நிலக்கோட்டை வட்டம் மெட்டூர் கேட் இரயில்வே லையனுக்கு அருகில் போக்குவரத்திற்காக சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) பணி எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இவ்விடத்தில் சுரங்கப்பாதைக்குப் பதிலாக ரயில்வே மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது.

(ஆ) திட்டத்தின் மதிப்பீடு ரூ. 46.442 இலட்சம்.

(இ) ரயில்வே மேம்பாலத்தின் இரு பக்கங்களிலுள்ள அணுகு சாலைகளின் நில உரிமை பெறுவதற்கான மதிப்பீட்டிற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேம்பாலம் கட்டுவதற்கு இரயில்வே வாரியத்தின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. நில உரிமை பெறல் முடிந்தவுடன் மேம்பாலம் மற்றும் அணுகு சாலைகள் மதிப்பீட்டிற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு சாலை வேலை தேசீய நெடுஞ்சாலைத் துறையால் எடுத்துக் கொள்ளப்பட்டு, மேம்பாலப் பகுதி ரயில்வே துறையினரால் நிறைவேற்றப்படும்.

1984 பிப்ரவரி 22]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட ரூ. 46½ இலட்சம் அளவிற்கு இந்தத் திட்டம் மதிப்பிடப் பட்டுள்ளது. அங்கே தினசரியும்—வருஷம் 365 நாளும் ஏதாவது ஒரு ஆக்சிடன்ட் நடந்து, பல பேர்கள் அந்த இடத்திலே இறந்து போயிருக்கக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்தாலே விரைவிலே ரெயில்வே துறை அந்தப் பணியை எடுத்துக்கொள்ள—ஆரம்பிக்க நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைக் கூட 1977–78-லேயே கொண்டு வர வேண்டுமென்றுதான் மத்திய அரசுக்குத் தாக்கீதுகள் கொடுத்தும்கூட காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, தமிழகத்தைப் பொறுத்த அளவில் பல்வேறு பகுதிகளில் இது போன்ற ரெயில்வே மேம்பாலங்கள் கட்ட வேண்டுமென்று ரெயில்வே துறையை அணுகி கேட்டுக் கொண்டிருக்கிறோம். 1 இலட்சம் டிரெயின் வெகிகில்ஸ் இருந்தால் பாலம் கட்டலாம் என்று விதிமுறைகள் வைத்துள்ளார்கள். ஆனால், நாம் கேட்டுக்கொண்டதன் பேரில், 50,000 டிரெயின் வெகிகில்ஸ் இருந்தாலே மேம்பாலம் கட்டலாம் என்று தளர்த்தப்பட்டிருக்கின்றன. அப்படியிருந்தும்கூட ரெயில்வே மேம்பாலத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படவில்லை, திட்டத்திலே சேர்க்கப்படவில்லை என்று சொல்லிக்கொண்டுதானிருக்கிறார்கள். ஆனாலும் இந்த ரெயில்வே மேம்பாலத்தைப் பொறுத்தவரை, உரிய நடவடிக்கைகள் சீக்கிரமாக எடுக்கப்பட்டு இந்த ஆண்டே அந்தப் பணத்தைப் பெறுவதற்குரிய முயற்சிகள் எடுக்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி. ஆனால் நிலம் ஆர்ஜிதம் செய்வதை நாம்தான் பார்க்கிறோம். அதிலே கூட காலதாமதம் ஏற்பட்டிருக்கிறதே, அதை விரைவிலே துரிதப்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நில ஆர்ஜிதத்தைப் பொறுத்தவரையில் தமிழக அரசுதான் செய்ய வேண்டும். அணுகு சாலைகளுக்காகத்தான் நில ஆர்ஜிதம் செய்யப் போகிறோம். அதை உடனடியாகச் செய்து விட முடியும். ஆனால் ரூ. 46 இலட்சம் மத்திய அரசிடத்திலே இருந்து வர வேண்டியிருக்கிறது. அதற்குரிய நடவடிக்கைகளைத்தான் நாம் சீக்கிரமாக விரைவுபடுத்த வேண்டும்.

(முற்பகல் 9-40)

திரு. ஏ. பாலுச்சாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் மேலூர், சமயநல்லூர் பக்கத்திலும் ரெயில்வே மேம்பாலம் இல்லாத காரணத்தால் இதுபோன்ற போக்குவரத்து இடைஞ்சல்கள் இருக்கின்றன. ஆகவே அவை களையும் இந்தத் திட்டத்தோடு சேர்த்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் மட்டுமல்ல, எல்லா மாவட் டங்களிலும் இது போன்ற நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் 326 இடங்களில் ரெயில்வே மேம்பாலம் கட்டவேண்டுமென்ற கோரிக்கையை ஏற்கெனவே நாம் மத்திய அரசிற்கு அனுப்பி இருக்கிறோம். ஆகவே ஒன்றல்ல, இரண்டல்ல, 326 இடங்களில் நாம் கேட்டிருக்கிறோம். அந்த அளவிற்கு ரெயில்வேயின் குறுக்கீடுகள் நம்முடைய சாலை யின் குறுக்கே வருவதால்தான் இதுபோன்ற நிலைமை ஏற்படு கிறது. இந்த அவையின் மூலம் ரெயில்வேத் துறையைக் கேட்டு கொள்வது, எவ்வளவு சீக்கிரமாக இந்தப் பணத்தை ஒதுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வோம்.

துடியலூர்-சின்னத்தடாகம் நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணி.

(*122 வினா 21336)—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், துடியலூர்-சின்னத் தடாகம் நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணிக்காக மதிப்பீடு தயாரிக்கப் பட்டுள்ளதா ?

(ஆ) இப் பணி எப்பொழுது முடிவுறும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : இப்பணிக்கு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அரசின் நிதி நிலை, வேலையின் முக்கியத்துவம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு இப்பணியை மேற்கொள்வது சம்பந்தமாக ஆராயப் படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS